Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்வு இதழ்
A monthly peer-reviewed online multi-disciplinary Tamil journal
ISSN: 3049-0723 (Online)

Volume 1, No. 04 | January 2025

# Women's life issues in Ira Prema's collection of women-centric short stories

**D. Geethanjali[1], A. Maheswai[2]**

1. *Assistant Professor Department of Tamil Studie, NGM Colleges, (Autonomous) Pollachi, Affiliated to Bharathiar University, Coimbatore Tamil Nadu, India*

2. *PhD Scholar, NGM Colleges (Autonomous)Pollachi, Affiliated to Bharathiar University, Coimbatore Tamil Nadu, India*

**ABSTRACT**

When we study the history of Tamil literature for 2000 years, women writers have recorded the life, culture and internal and external expressions of the Tamil land as well as the male writers. Numerically, there are very few works by women. However, women poets are the symbol of the Tamil language. The list of Tamil women poets is long. But there is no denying the fact that the patriarchal thinking prevailing in Tamil society has narrowed the space of women in the kitchen in the corner of the house. Girls were denied education. This article is based on some of the stories in Prema's 2004 collection Feminist Stories.

**ARTICLE INFO**

Received : 01 Dec 2024
Revised : 04 Dec 2024
Accepted : 01 Jan 2024

**KEYWORDS**

Feminine, women writers, Short stories, feminism, women's studies

**Suggested Citation (APA Style 7th Edition):**

# இரா.பிரேமாவின் பெண் மைய சிறுகதைகள் தொகுப்பில் பெண்களின் வாழ்வியல் சிக்கல்கள்

**முனைவர் த.கீதாஞ்சலி**

**நெறியாளர்: உதவிப்பேராசிரியர், என்.ஜி.எம் கல்லூரி, பொள்ளாச்சி**

**திருமதி.அ.மகேஸ்வரி**

**முனைவர் பட்ட ஆய்வாளர்:, என்.ஜி.எம் கல்லூரி, பொள்ளாச்சி.**

முன்னுரை

மாதர் தம்மை இழிவுசெய்யும்
மடமையைக் கொளுத்துவோம்

என்னும் கூற்றிற்கிணங்க இருபதாம் நூற்றாண்டு பெண்களுக்கு மறுமலர்ச்சி காலமாக அமைந்தது. படித்த ஆண்களில் சமூக விழிப்புணர்வு பெற்ற சிலர் பெண் விடுதலைக்குப் போரிட்டனர். பெண் அடிமைக்குக் காரணமான குழந்தை மணம், சதி, பர்தா முறை, தேவதாசி முறைகளை ஒழிக்க பாடுபட்டனர். அவர்களுக்குக் கல்வி விளக்கை ஏற்றினர். அதன்காரணமாக தன்னை முன்னிலைப்படுத்த விரும்பிய பெண்கள் படைப்பிலக்கிய ஆக்கத்தில் ஈடுபட்டனர். தொடக்கத்தில் காதல், திருமணம், குடும்பம், குடும்ப சிக்கல்கள் என்பனவற்றை களமாகக் கொண்டே பெண் எழுத்துகள் இருந்தன. ஆணை முதன்மைப்படுத்தியும் அவனுக்காக தன் வாழ்க்கையை வாழ்வதையும் மட்டுமே அப்பெண் எழுத்துகள் பேசின. காலம் செல்லச்செல்ல பெண் எழுத்துகளில் பல வித்தியாசங்கள் தோன்றின. சான்றாக வை.மு.கோதைநாயகி அம்மாள், மூவலூர் இராமாமிர்தம்மாள் , கிரிஜாதேவி போன்றோரைக் கூறலாம்.

நாற்பதுகளில் பல பெண்கள் மரபார்ந்த பெண் பிம்பங்களை தம் எழுத்துகளில் நிலைநிறுத்தினர். சான்றாக அநுத்தமா, குமுதினி, குகப்பிரியா, ராஜம்கிருஷ்ணன் போன்றோரைச் சொல்லலாம். அறுபது எழுபதுகளில் எழுத்துலகில் சிவசங்கரி, இந்துமதி, வாஸந்தி போன்றோர் எழுதிய படைப்புகள் பலரின் கவனத்தை ஈர்த்தன. குறிப்பாக பெண்கள் பெரிதும் வாசிக்க தொடங்கினர். எழுபதுகளின் இறுதியில் தொடங்கி பெண்களின் எழுத்தில் மாற்றம் தெரிந்தது. 1975 ஆம் ஆண்டை பெண்கள் ஆண்டாக யுனெஸ்கோ அறிவித்து பெருமை சேர்த்துள்ளது.

பெண்ணை மையமிட்ட அவர்களுக்கே உரிய பிரச்சனைகளை வெளிக்கொணரும் எழுத்துகள் பெண்ணியவாதிகளால் முன்னிருந்தப்பட்டன. அவ்வகையில் இருபத்தைந்து பெண் எழுத்தாளர்களால் எழுதப்பட்ட இருபத்தைந்து சிறுகதைகளைத் தொகுத்து பெண்ணிய கதைகள் என்ற பெயரில் இரா.பிரேமா நூலாக வெளியிட்டுள்ளார். இச்சிறுகதை நூலில் ஆணாதிக்க போக்கு, அடக்குமுறை, தோழமை, சகோதரத்துவம், பாலியல் வன்முறைகள், பெண்ணிய சிந்தனை எனப் பன்முக பொருண்மைகளில் சிறுகதைகள் அமைந்துள்ளன. இவற்றுள் எட்டு சிறுகதையை முன்வைத்தே இக்கட்டுரை அமைந்துள்ளது.

**ஆணாதிக்கப்போக்கு**

ஆணாதிக்க மரபுப்பிடியில் சிக்கித் தவிக்கின்ற பெண்கள் அதனை எதிர்த்து போராட முற்படுகின்றனர். அப்போது அமைதியற்ற மனதினையும், சிக்கல்களையும் தனிமையையும் சந்திக்கின்றனர். இக்கருத்தை எடுத்துரைப்பதாக இராஜம்கிருஷ்ணனின் தனிமை என்ற சிறுகதை

அமைந்துள்ளது. இக்கதையின் கதைத்தலைவி பிரேமாவுக்கு ரஜனி, உதயா என இருமகள்கள் உள்ளனர். உதயா கம்ப்யூட்டர் சாப்ட்வேர் படிச்சிட்டு கலிபோர்னியாவில் இருக்கிறார். ரஜனி ஆராய்ச்சி செய்கிறார். இருவரும் தாயுடன் இல்லை. பிரேமா வீட்டிற்கு வந்த சிறுமி கீதா உங்கள் மகளுடன் இருக்க வேண்டியது தானே என்று கேட்க அதற்கு பிரேமா “அவுங்க தனியா என்னை இருக்கச் சொல்லல என்னையும் கூப்பிட்டாங்க ஒருதரம் போனேன் ஆனா எனக்கு இந்த இடம்தான் பிடிச்சிருக்கு . அவுங்க வேலைக்கு போயிடுவாங்க ! அங்கேயும் தனியாதான் இருக்கனும் (பெண்ணிய கதைகள் பக்.4 ) என தனிமையின் கொடுமையைக் கூறினாள். ராஜம் கிருஷ்ணன் இக்கதையில் படிக்காத சென்ற தலைமுறைப்பெண் சந்தித்த பிரச்சனைகள் பற்றி ஒருவிதமாகவும் இன்று படித்த பெண்கள் சந்திக்கும் சிக்கல்களை மற்றொரு விதமாகவும் குறிப்பிட்டுள்ளார்.

சமூகத்தை எதிர்த்து போராடும் போது பெண் தனிமைப்படுத்தப்படுவதையும் சமூகத்தை மாற்ற முயலும் தொடர் நம்பிக்கை குறித்தும் இக்கதையில் கூறியுள்ளார். ஆர்.சூடாமணி எழுதிய குப்பம்மாவின் பெண்கள் என்ற சிறுகதை ஆணாதிக்கம் வலியுறுத்தப்படுகின்றது. பெண்களுக்கு பெயர் சூட்டுவதிலும் அப்பெயரை அழைத்து கிண்டல் செய்வதிலும் ஆணாதிக்கப்போக்கும் அடக்குமுறையும் இருப்பதை ஆசிரியர் கூறியுள்ளார்.

கண்மணி, சுமங்கலி, ஜெகத்ரட்சகி என மூன்று பெண்களுக்கும் குப்பம்மா பெயர் வைத்துள்ளார். சமூகம் இப்பெயர்களைச் சொல்லி கேலி செய்வதாக மகள்கள் கூறுகின்றனர். அதனால் ஜெகத்ரட்சகி – ஜெகதா என்றும், சுமங்கலி – சுமதி என்றும் பெயர் மாற்றம் செய்துகொண்டனர். இவர்களைத் தொடர்ந்து கடைக்குட்டி கண்மணியும் தன்பெயரை மாற்றும்படி கூறுகிறார்.

“அடி கண்மணி வண்ண பைங்கிளின்னு பாடறான் டேய்ன்னு அதட்டினா சினிமா பாட்டு பாடறன் உனக்கேன் கோபம் வருது கண்மணின்னு சொல்லிச் சிரிக்கிறான். கண்ட பயலும் என்னை கண்மணிங்கறான்மா! எல்லாம் உன்னால“ (பக்.19) பெண்களைப் பாதித்துக் கொண்டிருக்கிற சமூகத்தால் புறக்கணிக்கப்படுகிற ஒரு செயலை நகைச்சுவையுடனும் அதேசமயம் அதன் முக்கியத்துவத்தையும் உணர்த்தியுள்ளார் ஆசிரியர்.

**பெண்ணின் சுயம்**

பெண் பொருளாதாரத்தில் ஆணை நம்பி இருக்காமல் தன்னை நிலைநிறுத்தி வாழ்வதே சுயசார்பு எனப்படும். ஒரு பெண்ணின் ஆணிய சார்பே அவனின் எல்லா அடிமைத்தனத்திற்கும் கூட்டிச் செல்கிறது. சுயச்சார்புடைய பெண் தைரியமாக இருப்பாள். அவளின் உழைப்பே அவளுக்குத் தைரியத்தைக் கொடுக்கும். அப்படியான பெண்ணால் மட்டுமே ஆணின் அடக்குமுறைகளை எதிர் கொள்ள இயலும். அம்பையின் ஆயிரம் கொற்களும் ஒரு வார்த்தையும் எனும் சிறகதையில் அதனை வெளிப்படுத்துகிறார். ராஜம்மாள் பிரசவம் பார்க்கும் பெண்மணி சுயசார்பு உடையவள். அவளுக்கு குழந்தைகள் கிடையாது. ஒருநாள் நண்பர்களுடன் சீட்டாடிக்

கொண்டிருந்த கணவன் கெட்ட வார்த்தைகளால் திட்டி அவளை மலடு என்று கூறிவிடுகிறான். அதற்கு ராஜம்மா, மலடு நீரா நானாங்கணும்? (ப.580) என துணிச்சலாகக் கேட்டு விடுகிறாள். இதற்கு காரணம் ராஜம்மாவின் சுயச்சார்புடைமையே ஆகும். கணவனை சார்ந்திருக்கும் பெண்களால் கணவர்களின் வன்முறையை எதிர்க்க முடிவதில்லை. அதனை அம்பை சிறகுகள் முறியும் என்னும் சிறுகதையில் வெளிப்படுத்தியுள்ளார். சாயா என்ற பெண் பாஸ்கரன் என்பவனை திருமணம் செய்து கொள்கிறாள். அவள்  முழுமையாக கணவனைச் சார்ந்து வாழ்பவள். கணவன் பாஸ்கரன் கணக்குப் பார்த்து செலவு செய்பவன். வீட்டுத் தேவைகளுக்கே கணக்குப் பார்த்து பணம் கொடுப்பவன். கணவனைச் சார்ந்து வாழும் பெண் எவ்வாறு தன் ஆசைகளை இழந்மு முடங்கி வாழ்வாள். அடிப்படைத் தேவைகளுக்காகக் கணவனை சார்திருப்பதால் பெண் எவ்வாறு தானாகவே ஆணுக்கு அடிமையாவாள் என்பதை இதன் மூலம் அறியமுடிகிறது. சிறகிழந்த பெண்ணின் வாழ்வினை அம்பை வெளிப்படுத்தி இருப்பினும் அக்கதையில் அதனை கட்டுடைக்கும் வழியையும் தெரிவிக்கிறார். சாயாவிற்கு நன்றாக துணி தைக்க தெரியும். அவள் அதனைக் கொண்டு சம்பாதிக்கிறாள். அதன் மூலம் வரும் வருமானத்தைக் கொண்டு தன் மகன் சேகருடன் சுதந்திர வாழ்வு வாழ்கிறாள் என்ற சாயாவின் கற்பனையையும் அங்கு படைத்திருக்கிறார். கதையில் வரும் சாயாவின்  கற்பனை நிஜத்தில் பல பெண்களின் வாழ்வினை மாற்றியமைக்கும். அதற்காகவே அம்பை சிறகுகள் முறியும் சிறகதையில் சிறகு முறித்துக் கணவனை சகித்து வாழும் பெண்ணாய் சாயாவினைப் படைத்துக் விட்டு சாயா கற்பனை செய்வது போல் பெண் உரிமைக்கான வழியாய் சுயசார்புக் கொள்கையை வெளிப்படுத்தியுள்ளார்.

**உரிமையின்மை**

கட்டமைப்புகளைத் தாண்டி பெண்கள் வெளியில் வர முற்பட்டால் அதனை இந்தச் சமூகம் ஏற்றுக் கொள்ள மறுப்பதை பாரதி வன்மையாகக் கண்டிக்கிறார்.

”பெண்ணுக்குள் ஞானத்தை வைத்தான்- புவி

பேணி வளர்த்திடும் ஈசன்

மண்ணுக்குள்ளே சில மூடர்- நல்ல

மாதர் அறிவைக் கெடுத்தார்”

என்ற கவிதை மூலமாக, சமுதாயத்தில் பெண்களுக்கான உரிமை மறுக்கப்படுவதை எதிர்த்துப் பெண்கள் போரானார்கள் என்பதைத் திலகவதி தனது ஒப்பனை என்ற கதையில் கூறுகிறார்.

புமிநாதன் சினிமா கலைஞர்களுக்கு ஒப்பனைத் தொழிலைச் செய்து கொண்டிருக்கின்றான்.  அவனுக்குக் குடிப்பழக்கம் தொற்றிக் கொண்டது. அதனால் நோய்வாய்ப்பட்டான். தன்னுடைய மகள் நளினியைத் தன் தொழிலைத் தொடர்ந்து செய்யும்படி

கேட்கிறான். அதற்குப் பள்ளிப் படிப்பை முடித்த நளினி ஒப்பனைக் கலையையே பாடமாக எடுத்துப் படிக்கிறாள். தன் குடும்பச் சுமையின் காரணமாகத் தன் தந்தையின் வேலையைத் தனக்குத் தாருங்கள் என்று மேந்பார்வையாளரிடம் கேட்டாள். ”நாங்க பொம்பளைங்களை எங்க சங்கத்துலே சேர்த்துக்கறதா இல்ல” ப.275 என்றும், ஆம்பளைக் கெல்லாம் பொம்பள மேக்கப் போடறது சரியா இருக்காதுண்ணே, வேறமாதிரி பிரச்சனைங்க வரும். நம்ப தொழிலோட கௌவரமே போயிடும்” ப.176 என்றும் கூறுகிறார் மேற்பார்வையாளர். இதைக் கேட்ட நளினி, ”சார் பொம்பளைங்க நாட்டை ஆளறாங்க லாரி, பஸ், ஆட்டோ எல்லாம் ஓட்டறாங்க மேக்கப் வுமனா இருக்கக் கூடாதுங்கறது என்ன நியாயம்? பொம்பளை இதே சினிமா இண்டஸ்ட்ரியிலே தயாரிப்பாளரா, டைரக்டரா, ஒளிப்பதிவாளரா வேலை பாக்கலியா? என்னை மட்டும் ஏன் இப்படி தொல்லைப் படுத்தணும் ? ப.176 என்கிறாள். அவள் எவ்வளவோ போராடியும் அந்த வேலையைப் பெறமுடியவில்லை. அமைத்து முயற்சிகளும் தோல்வியில் முடிந்தன. எனவே அம்முயற்சியைக் கைவிட்டுத் தன்“ கவனத்தை ப் பள்ளி விழாக்கள், திருமணம், குடும்ப விழாக்கள் போன்றவற்றிற்கு ஒப்பனைத் தொழிலைத் தொடர்ந்து செய்து தன் பெற்றூரின் தேவையை நிறைவேற்றுகின்றாள்.

”ஆணுக்குப் பெண் இளைப்பில்லை என்று கும்மியடி” ப.183 என்றான் பாரதி. ஆனால் பெண்ணுரிமை என்பது இன்னும் ஏட்டுச் சுரைக்காயாகத்தான் உள்ளது என்பதைத் திலகவதி தம் கதையின் மூலம் உணர்த்துகின்றார்.

பெண்கள் உடலால் அடிமைப்பட்ட நிலையையும் காயம்பட்ட அனுபவத்தையும் கண்ணீரால் வெளிப்படுத்துவதையும் தவிர்த்து கணத்த சொல்லாடல்களில் வெளிப்படுத்தியமையே பெண்ணிய சிந்தனை. ஜோதிர்லதா கிரிஜாவின் அம்மாவின் அந்தரங்கம், சுமதிரூபனின் அம்மா இது என் உலகம், பாமாவின் பொன்னுத்தாயி, தமயந்தியின் விலங்களும் ஒரு விலாங்கு மீனும் போன்ற கதைகள் இவ்வகையில் அமைகின்றன. அம்மாவின் அந்தரங்கம் என்ற கதை பெண்கள் கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன் ,கணவனே கண்கண்ட தெய்வம் வாழ்ந்தது போதும் என்பதைச் சொல்லிச் செல்கிறது. கணவன் தவறைப் பொறுத்துக் கொண்டு அடங்கி போக வேண்டும் என்பது கண்மூடித்தனமாக வழக்கம். கணவனின் நியாயமற்ற செயலை எதிர்த்து பெண்கள் குரல்கொடுக்க வேண்டும் என்ற விழிப்புணர்வை இக்கதையின் மூலம் ஆசிரியர் கூறியுள்ளார். அம்மா இது என் உலகம் என்ற கதையில் விதவிதமான நகை, புடவை, கார் என்று வசதியுடன் பெண் இருந்தாலும் பெண்களுக்குச் சுயசிந்தனை , சுயமதிப்பு மிக முக்கியம் என்பதைக் கூறுவதாக இக்கதை உள்ளது. “புருஷனுக்காகச் சீலகட்டி ..... புருஷனுக்காக நகைபோட்டு அவனுக்காக சாப்பிட்டு அவனுக்காக சிரிச்சு அழுது தன்னைத் தொலைத்த அவலத்தை தாய் கூறியபோது”( பக்.46)

இளையதலைமுறையாகிய ஆர்த்தி திருமணம் தன் தாயின் சுயத்தை அழித்துவிட்டதை உணர்வதாக ஆசிரியர் அமைத்துள்ளார்.பெண்களுக்குள் புரிதலின் தேவையையும் இக்கதை விளக்குகிறது. பொன்னுத்தாயி கதையில் பொன்னுத்தாயி படிக்காதவள் நான்கு பிள்ளைகளுக்குப் பிறகும் கணவன் குடித்துவிட்டு அவளை அடிக்கிறான். அவள் கூலியை அடித்து பிடுங்குகிறான். இது

நாளும் தொடர்ந்த நிலையில் கணவனிடம் பிள்ளைகளை விட்டுவிட்டு தாய் வீட்டிற்கு வந்து சுயவியாபாரம் செய்து பிழைக்கிறாள் பொன்னுத்தாயி. தன்னை அடித்து இழுத்துப்போக வந்த கணவனை போலீசில் புகார் செய்கிறாள். கணவனே பிள்ளைகளை நீயோ வைத்து காப்பாற்று என்று கூற "பெத்தவதான் பிள்ளைகளை வளர்க்கனும்னு சட்டமா என்ன இங்கு கூட்டியறாத இனி நீ இந்த பக்கமே நீ தலயக்காட்டாத சொல்லிட்டேன் ஆமா"(பக்.118) என்று கூறுகிறாள்.

இத்தொல்லைக்கு முற்றுப்புள்ளியாக தாலியை அறுத்து விடுகிறாள். அதிலுள்ள தங்கத்தை விற்று ஊருக்குள் கடையைத் திறந்து வியாபாரம் செய்கிளாள் என்று முற்போக்காக ஆசிரியர் கதையை முடித்துள்ளது கவனிக்கத்தக்கது. தனக்கான வாழ்வை தானே முடிவு செய்துகொண்டு வாழும் சுயசிந்தனையையும் இக்கதையில் பதிவு செய்துள்ளார்.

தமயந்தியின் விலங்களும் ஒரு விலாங்கு மீனும் என்ற கதையில் சித்ரா என்ற பெண் தான் விரும்பிய ஆணுடன் அவன் வீட்டிற்கு வந்து பார்க்கிறாள். அவன் வீடோ ஆணாதிக்கத்தின் பிடியில் சிக்கி இருப்பதைப் புரிந்து கொள்கிறாள். காதலுக்காக அடிமை வாழ்வை விரும்பாத அவள் அந்த வீடு தனக்கு சரியாக வராது என்பதை அறிந்து அவனை நிராகரிக்கிறாள். திருமணச் சந்தையில் இதுவரை பெண்கள் நிராகரிக்கப்பட்ட சூழலில் முதன்முதலாக ஆண் நிராகரிக்கப்பட்டதைக் கூறுவதிலிருந்து பெண்களின் சுயசிந்தனை, சுயதைரியம் இக்கதையின் படிப்பவரால் அறிந்து கொள்ள முடியும்.

**இதிகாசப்பகுதிகள் மறுவாசிப்பு**

அனுராதாவின் வலி, சூ.இ.குழந்தையின் புதிய ஏவாள் போன்ற கதைகள் இதிகாசப் பகுதிகளை மறுவாசிப்பு செய்யும் முயற்சியில் எழுதப்பட்டவையாக இருக்கின்றன. வலி என்ற சிறுகதையில் நிறைமாத கர்ப்பிணியை யாரோ சொன்னார்கள் என்பதற்காக விளக்கம் கேட்காமல் காட்டில் விட்டுவரச் சொன்ன சீதைக்கு முதன்முதலில் அந்நியனாக தெரிகிறான். அக்னிப்ரீட்சைக்குப் பின்னும் தான் துரத்தி அடிக்கப்பட்டதை உணர்ந்த சீதா ராமனின் தூரோகத்தை உணர்கிறாள். அக்கணமே சீதையின் சிந்தனை வித்தியாசமாக சிந்திக்க துவங்குகிறது. ராவணின் செய்கை ராமனைக் காட்டிலும் சிறப்புடையதாக உள்ளது. ஆதலால் அவனை நல்லவனாக எண்ணுகிறாள் சீதை. அந்த நேரத்தில் தான் ஏங்கிய காதல் கைத்தட்டி போக தனக்காக ஏங்கிய ராவணனின் காதலை நினைத்து பார்க்கிறது அவள் உள்ளம். அந்த நிமிடம் அவனுக்காக சீதை வாய்விட்டு அழுகிறாள். இக்கதையில் பெண்ணின் உள்ளத்தை படம்பிடித்து காட்டுகிறார் ஆசிரியர்.

புதிய ஏவாள் என்ற சிறுகதையில் ஆணாதிக்கம் தலைதூக்கி பெண் அடிமைத்தனம் நிலைபெற்ற வரலாற்றையும் ஆதாம் ஏவாள் கதைப்பின்னணியில் அழகாக சொல்லியுள்ளார் ஆசிரியர். பாரதியாரின் புதுமைப்பெண்ணாக படைக்கப்பட்டிருப்பவளே புதிய ஏவாள் .அடிமை விலங்கிடப்பட்டவள் பழைய ஏவாள். அடிமை விலங்கை உடைத்தெறிந்தவள் புதிய ஏவாள். மேலும்

இவள் சிந்திக்கவும் செயல்படவும் தெரிந்தவள். “போர்க்காலங்களில் ஏவாள் அமைதியானாள். மனித குலத்திற்கு நாகரிகத்தையும் பண்பாட்டையும் புகட்டியவள் அநாகரிகமாக நடத்தப்பட்டாள். 50 ஆயிரம் ஆண்டுகள் புவியைத் தனது பக்கம் சுழற்றியவள் கடைசிஐந்தாயிரம் ஆண்டுகளில்கரைந்தாள், உடைந்தாள், கதறினாள், காயம்பட்டாள், விம்மினாள், வெடித்தாள், குமுறினாள் “(பக்.215) என வினைமுற்றுச் சொற்களை அடுக்கி பெண்ணடிமை வரலாற்றின் அவலங்களை சிறப்பாக இக்கதையில் ஆசிரியர் கூறியுள்ளார்.

ஏவாள் ஆதாமிடம் உனக்காகவே நான் வாழ்ந்தப்போ நீ என்னை சாகடிச்ச இப்ப நான் பழைய ஏவாள் இல்லை. சொந்த காலில் நிற்க பழகிவிட்டேன். இந்த உலகைப் புதுப்பிக்க வந்த புதிய ஏவாள் நான் என்று கதையை முடிக்கும் போது பெண்மையின் வெற்றியும் வைராக்கியமும் புலப்படுகிறது. பெண்களின் பன்முகங்களை பலரது எழுத்துகளின் வழியாக இத்தொகுப்பாசிரியர் தொகுத்துத் தந்துள்ளார். இந்நூல் பெண் பற்றிய கட்டமைப்பு பிம்பங்களை உடைத்தெறிந்துள்ளது எனில் அது மிகையன்று.

REFERENCE

1.இரா.பிரேமா, பெண்ணிய கதைகள், காவ்யா பதிப்பகம், சென்னை. மு.ப.2004

2. தாயம்மாள் அறவாணன், பெண் இன்று- நேற்று- அன்று, தமிழ்க்கோட்டம், 1987

3.ராஜம்கிருஷ்ணன், காலந்தோறும் பெண், தாகம் பதிப்பகம், 2002

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.